# <u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,அன்னூர்.</u>
# <u>O.S.No. 148 / 2024</u>

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள், செவ்வாய்க்கிழமை 10-ம் நாள் திருமதி.லட்சுமி என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873ம் ஆண்டு 10வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. வெ.மோனிகா, பி.ஏ.,பி.எல்.,எல்.எல்.எம்., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிபதி, அன்னூர் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | லட்சுமி | வயது | 72 |
| க.பெ. | சோமசுந்தரம் | தாலூக்கா | அன்னூர் |
| கிராமம் | செந்தாம்பாளையம் | மாவட்டம் | கோவை |
| தேதி | 10.03.2026 | PW – 1 | |

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கின் வாதி. இந்த வழக்கில் எனது சாட்சியத்தை பொருத்து எழுத்துமூல நிரூபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நிரூபண வாக்குமூலத்தில் கண்டுள்ள கையொப்பம் என்னுடையதுதான். எனவே அதனை எனது முதல் விசாரணையாக பாவிக்குமாறு கேட்டுகொள்கிறேன்.

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | | எனது ஆதார் அடையாள அட்டை – அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல். |
| வா.சா.ஆ.2 | 17.10.1996 | ராமணகவுண்டர் இறப்புச்சான்று – சான்று நகல். |
| வா.சா.ஆ.3 | 06.01.2003 | ராமணகவுண்டர் வாரிசு சான்று – அசல். |
| வா.சா.ஆ.4 | 12.10.2011 | மைலம்பட்டி கிராமம் பட்டா எண்.787 – இணைய தரவிறக்கம் செய்யப்பட்ட நகல். |
| வா.சா.ஆ.5 | | எனது நிரந்தர கணக்கு அட்டை – அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல். |
| வா.சா.ஆ.6 | | எனது குடும்ப அட்டை – அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல். |
| வா.சா.ஆ.7 | | எனது கடவுச்சீட்டு – அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல். |
| வா.சா.ஆ.8 | | எனது கனரா வங்கிக் கணக்கு பாஸ் புத்தகம் – அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல். |

மேற்படி எனது சாட்சியத்தை ஏற்றுக்கொண்ட தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனக்கு லட்சுமி மற்றும் சுப்பாத்தாள் என்ற பெயர்கள் உண்டு. இரண்டும் நான்தான் என்பதற்காக இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன். நான் கல்வி பயிலவில்லை. நான்தான் சுப்பாத்தாள் என்பதற்காக ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். நான் தான் ராமணகவுண்டரின் மகள் என்று நிரூபணம் செய்ய ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள மயிலம்பட்டி கிராம பட்டா எண்.787 என் பெயரில் உள்ளதாக சொல்லும்போது அந்த சொத்து தொடர்பான பத்திரங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வருவாய் ஆவணங்களைத் தவிர மற்ற ஆவணங்களில் என் பெயர் லட்சுமி என்றுதான் கண்டுள்ளது என்றால் சரிதான். மயிலம்பட்டி கிராமத்தில் என் தந்தையைத் தவிர மற்ற நபர்களுக்கும் ராமண கவுண்டர் என்ற பெயர் உள்ளது என்றால் சரிதான். நான் வழக்கில் கோரியுள்ளது போல் சுப்பாத்தாள் என்ற பெயர் என்னை குறிக்காது என்றும், அதற்கான போதுமான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றும் அதனால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் தவறு.

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.

S/d.V.Monika
District Munsif Cum Judicial Magistrate
Annur